**செப்டம்பர் – 25**

# TNPSC துளிகள்

- அரசு வேலைகளில் விளையாட்டு வீரர்களுக்கான 3% இட ஒதுக்கீட்டின் கீழ் சதுரங்க வீராங்கனை R. வைஷாலி, கால்பந்து வீராங்கனை K. சுமித்ரா மற்றும் கூடைப்பந்து வீராங்கனை S. சத்யா ஆகியோர் பல்வேறு பதவிகளில் நியமிக்கப்பட்டனர்.
- செயல்பாட்டுத் திறனை உறுதிப்படுத்துவதற்காக இராஜஸ்தானின் தார் பாலைவனத்தில் உள்ள மகாஜன் வனச் சரகத்தில் இராணுவத்தின் தென்மேற்குப் படைப் பிரிவானது அமோக் ஃப்யூரி பயிற்சியை நடத்தியது.
- அமெரிக்காவின் சிட்னி மெக்லாலின் லெவ்ரோன், உலக சாம்பியன்ஷிப் போட்டியின் மகளிருக்கான 400 மீட்டர் ஓட்டப் பந்தயத் தூரத்தினை 47.78 வினாடிகளில் ஓடி நிறைவு செய்து தங்கம் வென்றார்.
    - இது 400 மீட்டர் தடை தாண்டலில் இருந்து மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமாக மாற்றத்தினை நிறைவு செய்து, கடந்த 40 ஆண்டுகளில் பதிவான மிக வேகமான நிறைவு நேரம் ஆகும்.
- வங்காளதேசத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஹில்சா மீன்களின் முதல் தொகுதி ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று மேற்கு வங்க மாநிலத்தின் பெட்ராபோல் எல்லை வழியாக இந்தியாவிற்கு வந்தது.
    - 2019 ஆம் ஆண்டிலிருந்து, வங்காளதேச அரசானது 2012 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட அதன் ஏற்றுமதி தடைக்கு சிறப்பு விலக்கு அளித்ததன் கீழ் பூஜைப் பருவத்தில் மட்டுமே இந்தியாவிற்கு ஹில்சா ஏற்றுமதியை அனுமதித்து உள்ளது.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது, கோவா கப்பல் கட்டும் தளத்தினால் கட்டமைக்கப் பட்ட ICGS அக்சர் எனப்படும் இரண்டாவது அடம்யா வகை விரைவு ரோந்து கப்பலினைப் பெற்றது.
    - இந்தக் கப்பலானது பொருளாதார மண்டல ரோந்துகள், கடத்தல் எதிர்ப்பு, கடற் கொள்ளைப் பணிகள், தேடல் மற்றும் மீட்பு மற்றும் போர்க்கால துணைக் காப்புப் பணிகளைச் செய்யும்.
- உலக தூய்மைப்படுத்தும் தினத்தின் உலகளாவிய அனுசரிப்பு ஆனது ஆண்டுதோறும் செப்டம்பர் 20 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
    - இந்த ஆண்டு ஜவுளி மற்றும் ஆடை வடிவமைப்பு துறை சார்ந்த கழிவுகளில் கவனம் செலுத்தப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## Chennai One செயலி

- Chennai One என்பது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 ஆம் தேதியன்று தமிழக முதலமைச்சரால் தொடங்கப்பட்ட ஒரு கைபேசி செயலியாகும்.
- சென்னை நகரம் முழுவதும் பயணங்களைத் திட்டமிடுவதற்கும் முன்பதிவு செய்வதற்கும் இந்த செயலி ஒரு ஒருங்கிணைந்த தளமாக செயல்படுகிறது.
- இது பெருநகரப் போக்குவரத்துக் கழக (MTC) பேருந்துகள், சென்னை மெட்ரோ இரயில், புறநகர் இரயில்கள், ஆட்டோக்கள் மற்றும் வாடகை வண்டிகள் உட்பட பல போக்குவரத்து முறைகளை ஆதரிக்கிறது.

- இந்தச் செயலியானது பயனர்கள் இணக்கமான போக்குவரத்துச் சேவைகளில் செல்லுபடியாகும் ஒற்றை QR (விரைவு உரலி) குறியீடு பயணச் சீட்டினை உருவாக்க அனுமதிக்கிறது.
- சென்னை ஒருங்கிணைந்தப் பெருநகரப் போக்குவரத்து ஆணையம் (CUMTA) ஆனது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் திட்டத்தைத் தொடங்கியது.
- இது "இந்தியாவின் முதல்" ஒருங்கிணைந்த பொதுப் போக்குவரத்து டிக்கெட் அமைப்பு என்று விவரிக்கப்படுகிறது.




## கேரளாவில் பெரியார் நினைவுச் சின்னம்

- தமிழ்நாடு அரசானது, கேரள மாநிலத்தின் ஆலப்புழாவில் உள்ள ஆறுக்குட்டியில் பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களின் நினைவிடத்தைக் கட்டமைக்க உள்ளது.
- இதற்கான அடிக்கல் ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் தேதியன்று நாட்டப்படும்.
- இந்தத் திட்டத்திற்காக தமிழக அரசு 4 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.
- 1924 ஆம் ஆண்டு வைக்கம் சத்தியாகிரகத்தின் போது பெரியார் ஈ.வெ. இராமசாமி ஆறுக்குட்டியில் சிறையில் அடைக்கப்பட்டார்.
- அவர் 1924 ஆம் ஆண்டு மே 21 ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டு, அப்போதைய திருவிதாங்கூரின் ஒரு பகுதியாக இருந்த ஆறூக்குட்டி சிறையில் ஒரு மாதம் சிறை வைக்கப்பட்டிருந்தார்.
- பழைய சிறைச்சாலையின் சேதமடைந்தப் பகுதிகள் இன்னும் அந்த முன்மொழியப்பட்ட நினைவுச் சின்னப் பகுதியில் உள்ளன.
- வைக்கம் சத்தியாகிரகம் ஆனது சாதி அடிப்படையிலான கட்டுப்பாடுகளை எதிர்த்து 1924 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 1925 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை நடைபெற்றது.
- வைக்கம் ஸ்ரீ மகாதேவர் கோயிலில் அனைத்து சாதியினரும் நுழைய வேண்டும் என்பதில் இந்த இயக்கம் கவனம் செலுத்தியது.
- ஆரம்பத்தில் இது T.K. மாதவன், K.P. கேசவ மேனன் மற்றும் ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் தலைமையில் நடத்தப்பட்டது.
- இந்த இயக்கத்தின் காலப் போக்கில் M.K. காந்தி இந்த இயக்கத்தை ஆதரித்தார்.
- பல தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர், 1924 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதியன்று பெரியார் இந்தப் போராட்டத்தில் இணைந்தார்.
- அவர் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு போராட்டத்தை நிலை நிறுத்துவதில்

முக்கியப் பங்கு வகித்தார்.

- 1924 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் விடுவிக்கப்பட்ட பிறகு, ஜூலை மாதம் மீண்டும் கைது செய்யப்பட்டு அவருக்கு நான்கு மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கப் பட்டது.
- அவர் திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.
- 1936 ஆம் ஆண்டு கோயில் நுழைவுப் பிரகடனத்திற்கு சத்தியாக்கிரகம் ஒரு முக்கிய முன்னோடித் திட்டமாக அமைந்தது.




## தமிழ்நாடு-ஹரப்பா வர்த்தகம்



- திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டியில் ஒரு சுடுமண் ஈமப்பேழை (சவப்பெட்டி) கண்டெடுக்கப்பட்டது.
- இது துகள் முடுக்கி மூலமான திரள் நிறமாலை (AMS) நுட்பம் மூலமான கதிரியக்க

கார்பன் மூலமான காலக் கணிப்பு மூலம் அறிவியல் பூர்வமாக கிமு 1692 ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்று கண்டறியப்பட்டது.

- புதைவிடத்திலிருந்து எடுக்கப்பட்ட கரியின் காலம், அமெரிக்காவில் உள்ள பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகத்தினால் கண்டறியப்பட்டது.
- புதைவிடத்தில் காணப்படும் உருவங்கள் பொறிக்கப்பட்ட கார்னிலியன் மணிகள், ஹரப்பா காலத்தின் பிற்பகுதியில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத்துடனான வர்த்தக தொடர்புகளைக் குறிக்கின்றன.
- சவப்பெட்டிக்கு அருகில் காணப்படும் குறியீடுகள் பொறிக்கப்பட்ட மட்பாண்டத் துண்டுகள், தமிழ்நாட்டின் சுவரோவிய அடையாளங்கள் கிமு 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பதைக் குறிக்கின்றன.
- 140 தளங்களில் நடத்தப்பட்ட ஆய்வில், 90% சுவரோவிய சின்னங்கள் ஆனது சிந்து சமவெளி நாகரிகத் தளங்களிலிருந்து பெறப்பட்டவற்றுடன் நன்கு பொருந்துவதாகக் கண்டறியப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## யாத்ரி சேவா திவாஸ் 2025




- பொது விமானப் போக்குவரத்து அமைச்சகமானது இந்திய விமான நிலையங்கள் முழுவதும் பயணிகள் சேவைகளை மேம்படுத்துவதற்காக யாத்ரி சேவா திவாஸ் 2025 முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- இந்த முன்னெடுப்பானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் தேதியன்று உத்தரப் பிரதேசத்தின் ஹிண்டன் விமான நிலையத்தில் தொடங்கப்பட்டது.
- ஸ்வஸ்தா நாரி, சஷக்த் பரிவார் அபியான் உடன் சேர்த்து, இந்த நிகழ்வில் சுகாதார முகாம்கள், மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் பெண் பயணிகளுக்கான செயல்பாடுகள் இடம் பெற்றன.

- 2014 ஆம் ஆண்டில் 11 கோடியாக இருந்த பயணிகளின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டில் 25 கோடியாக உயர்ந்தது என்பதோடு இது UDAN போன்ற உள்ளடக்கிய கொள்கைகளால் இயக்கப்படும் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

## உச்ச நீதிமன்றத்தின் பொன்னார்ட் விதி


> No doubt the Constitution guarantees the right to freedom of speech, but at the same time, this right is subject to reasonable restrictions specified under Article 19(2) of the Constitution. A person cannot be permitted to make allegations defamatory and contemptuous in nature which brings the highest institution in judiciary to disrepute —**SC bench**

- பொன்னார்ட் மற்றும் பெர்ரிமேன் (1891, ஐக்கியப் பேரரசு) வழக்கிலிருந்து பெறப்பட்ட பொன்னார்ட் தரநிலையானது, பிரதிவாதியால் கூறப்படும் அவதூறை நியாயப்படுத்த முடியாவிட்டால், நீதிமன்றங்கள் உறுத்துக் கட்டளையை வழங்குவதைத் தடுக்கிறது.
- இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது 2024 ஆம் ஆண்டில் ப்ளூம்பெர்க்கிற்கு எதிரான மறு தரப்பிலா உறுத்துக் கட்டளையை ரத்து செய்வதன் மூலம் இந்தத் தரத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது.
- உறுத்துக் கட்டளையை வழங்காதது அதிக அநீதியை ஏற்படுத்தும் சூழலின் போது மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- அதானி அவதூறு வழக்கில் பத்திரிகையாளர்களுக்கு எதிரான டெல்லி நீதிமன்றத்தின் மறுதரப்பிலா உறுத்துக் கட்டளை உத்தரவு, வாதத்தைக் கேட்காமல் முன் கூட்டியே தடையை விதிப்பதன் மூலம் இந்தத் தர நிலையை மீறியது.
- இத்தகைய முன் கூட்டிய தடையானது, 19(2) சரத்தின் கீழ் உள்ள நியாயமான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுப் பேச்சுச் சுதந்திரத்தை உறுதி செய்கின்ற இந்திய அரசியலமைப்பின் 19(1)(a) சரத்தினை மீறுகிறது.
- உச்ச நீதிமன்றம் ஆனது பேச்சு சுதந்திரத்தையும் பொதுமக்களின் தகவல் அறியும் உரிமையையும் அச்சுறுத்தும் மறுதரப்பிலா உறுத்துக் கட்டளைகளை பலமுறை கண்டித்துள்ளது.

## IPRS 3.0 அமைப்பு

- மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் புது டெல்லியில் தொழில்துறை பூங்கா மதிப்பீட்டு அமைப்பு (IPRS) 3.0 அமைப்பினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த அமைப்பை ஆசிய மேம்பாட்டு வங்கியின் (ADB) ஆதரவுடன் தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) உருவாக்கியுள்ளது.


- IPRS 3.0 ஆனது இந்தியா முழுவதும் உள்ள தொழில்துறைப் பூங்காக்களின் உள் கட்டமைப்பு, வசதிகள் மற்றும் போட்டித்தன்மையை மதிப்பிடுவதை சில முக்கிய அளவுருக்களாகக் கொண்டிருப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பூங்காக்கள் ஆனது நிலைத்தன்மை, தளவாடங்கள், டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் குத்தகைதாரர்களின் கருத்துரைப்பு உள்ளிட்ட முக்கியக் குறிகாட்டிகளின் அடிப்படையில் தலைவர்கள், சவால் போட்டியாளர்கள் அல்லது ஆர்வலர்கள் என வகைப்படுத்தப்படும்.
- இந்த அமைப்பானது, முதலீடுகளை ஈர்க்கவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும், தேசிய தொழில்துறை வழித்தட மேம்பாட்டுக் கழகத்தின் (NICDC) கீழ் கணினியுடன் இணைக்கப் பட்டு இயக்கப்படும் 20 தொழில்துறைப் பூங்காக்களின் மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கவும் உதவும்.




## பெலெம் சுகாதாரச் செயல் திட்டம்


- ஜூலை 29 முதல் 31 ஆம் தேதி வரை பிரேசிலில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு பருவநிலை மற்றும் சுகாதாரம் குறித்த உலகளாவிய மாநாட்டில் இந்தியா அதிகாரப் பூர்வமாக பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற உள்ள COP30 மாநாட்டில் தொடங்கப் படவுள்ள பெலெம் சுகாதார செயல் திட்டமானது உலகளாவியப் பருவநிலை-சுகாதார செயல்பாட்டு நிரலை வரையறுக்கும்.
- இந்தியாவின் வளர்ச்சி நலத் திட்டங்கள் பருவநிலை மற்றும் சுகாதாரத்துடன் இணைந்த நன்மைகளுடன் மதிப்பிடக் கூடிய மாதிரிகளை வழங்குகின்றன.
- பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மான் திட்டம் ஆனது சுமார் 1.1 மில்லியன் பள்ளிகளில் 110 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளுக்கு பயனளித்தது.
- இது ஊட்டச்சத்து மற்றும் பருவநிலை நெகிழ்திறன் கொண்ட உணவு முறைகளை ஆதரிப்பதற்காக சிறு தானியம் மற்றும் பாரம்பரிய தானியங்களை ஊக்குவிக்கிறது.
- சுவச் பாரத் அபியான் சுகாதாரம், பொது சுகாதாரம், மனித கண்ணியம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது.
- மகாத்மா காந்தி தேசியக் கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் ஆனது வாழ்வாதாரங்களை ஆதரிக்கிறது மற்றும் சுற்றுச்சூழல் சார் பணிகள் மூலம் சீரழிந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுக்கிறது.
- பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா, வீடுகளில் காணப்படும் காற்று மாசுபாடு மற்றும் கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்து, தூய்மையான சமையல் எரி பொருளுக்கு மாற உதவுகிறது.

- இந்தத் திட்டங்கள் எதுவும் பருவநிலைக் கொள்கையாக வடிவமைக்கப்படவில்லை, ஆனால் சுகாதாரம் மற்றும் பருவநிலை சார்ந்த நன்மைகளை வழங்கின.
- சுகாதாரம் சார்ந்த பருவநிலை நிர்வாகக் கட்டமைப்பு ஆனது மூன்று நிறுவனத் தூண்களை அடிப்படையாகக் கொண்டது.
    - முதல் தூண், பருவநிலைக் கொள்கையை உடனடி சுகாதாரத் தேவைகளுடன் இணைப்பதன் மூலமான உத்தி சார் அரசியல் முன்னுரிமை ஆகும்.
    - இரண்டாவது தூண், அனைத்துத் துறைகளிலும் கட்டாய சுகாதாரத் தாக்க மதிப்பீடுகள் மூலமான நடைமுறை ஒருங்கிணைப்பு ஆகும்.
    - மூன்றாவது தூண், ஆரோக்கியத்தைச் செயலாக்கக் காரணியாகப் பயன்படுத்திச் சமூகங்களை ஈடுபடுத்துவதன் மூலமான பங்கேற்பு சார் செயல்படுத்தல் ஆகும்.





## LEADS 2025 கணக்கெடுப்பு

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகமானது, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதியன்று புது டெல்லியில் பல்வேறு மாநிலங்களில் தளவாடக் கையாளுதலை எளிதாக்குதல் (LEADS) 2025 கணக்கெடுப்பினை அறிமுகப்படுத்தியது.
- LEADS 2025 ஆனது இந்தியாவின் மேக் இன் இந்தியா மற்றும் ஆத்மநிர்பர் பாரத் முன்னெடுப்புகளை ஆதரிப்பதற்காக, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் தளவாட செயல்திறன்களுக்கு அளவுருக்களை நிர்ணயிக்கிறது.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது சிறந்த நடைமுறைகளை அடையாளம் காட்டுகிறது, மேம்படுத்தப்பட வேண்டிய பகுதிகளை குறிப்பிட்டு காட்டுகிறது மற்றும் தளவாட செலவுகளைக் குறைப்பதற்கும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்குமான ஒத்துழைப்பைச் செயல்படுத்துகிறது.
- பயண நேரம், சரக்குந்தின் வேகம் மற்றும் காத்திருப்பு காலங்களை அடிப்படையாகக் கொண்ட வழித்தடச் செயல்திறன் மதிப்பீடுகள் மற்றும் முக்கிய சாலைப் பிரிவுகளில் API மூலம் இயக்கப்பட்ட வேக மதிப்பீடுகள் ஆகியவை இதன் புதிய அம்சங்களில் அடங்கும்.




## தளவாட தரவு வங்கி 2.0




- மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஆனது புது டெல்லியில் தளவாட தரவு வங்கி (LDB) 2.0 என்ற வசதியினை அறிமுகப்படுத்தியது.
- LDB 2.0 பல் முனை ஏற்றுமதிகளில் MSME நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை ஆதரிக்கும் வகையில் நிகழ்நேரக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை வழங்குவதன் மூலம் தளவாடச் செயல்திறனை மேம்படுத்துகிறது.
- இந்தத் தளமானது உயர் (தொலைதூர) கடல் கொள்கலன் கண்காணிப்பை வழங்கி, இந்தியத் துறைமுகங்களுக்கு அப்பால் மற்றும் சர்வதேசக் கடல் பகுதிகள் முழுவதும் ஏற்றுமதி கொள்கலன்களின் தெரிவுநிலையை செயல்படுத்துகிறது.
- இது கொள்கலன், சரக்குந்து, சரக்குந்து இழுவைகளின் எண்கள் மற்றும் இரயில்வே சரக்கு குறிப்பு சார்ந்த குறிப்புகள் வழியாக கண்காணிப்பதற்கான ஒருங்கிணைந்த தளவாட இடைமுக தளத்தின் (ULIP) APIகளுடன் ஒருங்கிணைக்கப்படுகிறது.
- LDB 2.0 ஆனது கொள்கலன் விநியோகத்தைக் கண்காணிக்க ஒரு நேரடிக் கொள்கலன்

வண்ணக் குறிப்பு வரைபடத்தை உள்ளடக்கியது என்பதோடு இது விநியோகச் சங்கிலி சிக்கல்களை நிவர்த்தி செய்வதில் பங்குதாரர்களுக்கு உதவுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## மொராக்கோவில் பாதுகாப்பு துறைக்கான ஆலை

- ஆத்மநிர்பர் பாரத் (தன்னிறைவு பெற்ற இந்தியா) முன்னெடுப்பின் கீழ் முதல் இந்திய பாதுகாப்பு துறை சார் உற்பத்தி ஆலையானது மொராக்கோவில் அமைக்கப்படுகிறது.
- இந்த ஆலையானது, ஆப்பிரிக்காவில் உள்ள முதல் இந்திய பாதுகாப்புத் துறை சார் உற்பத்தி ஆலை ஆகும் என்பதோடு மேலும் இது இந்தியாவின் பாதுகாப்புத் துறையின் விரிவடைந்து வரும் உலகளாவியப் பரவலைப் பிரதிபலிக்கிறது.
- பயிற்சி, பரிமாற்றங்கள் மற்றும் தொழில்துறை இணைப்புகளை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி பாதுகாப்பு துறை சார் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## செங்கழுத்து உள்ளான்

- திருப்பூரில் உள்ள நஞ்சராயன் பறவைகள் சரணாலயத்தில் முதன்முறையாக செங்கழுத்து உள்ளான் (பலரோபஸ் லோபாட்டஸ்) தென்பட்டது.
- இது பொதுவாக உள்நாட்டு நீர்நிலைகளில் அல்லாமல் கடலோர அல்லது கடல் பகுதிகளில் காணப்படும் ஓர் அரிய இனமாகும்.
- இது சரணாலயத்தில் பதிவு செய்யப்பட்ட 192வது பறவை இனமாகும்.
- ஆர்டிக்கிலும் தென்கிழக்கு நாடுகளில் குளிர்காலத்திலும் இனப்பெருக்கம் செய்கின்ற இந்தப் பறவையானது, சுழலும் நுட்பத்தைப் பயன்படுத்தி முதுகெலும்பில்லாத மிதவை வாழ் உயிரினங்களை உண்கிறது.




### இரிடோகோர்ஜியா செவ்பாக்கா




- வெப்பமண்டல மேற்குப் பசிபிக் பெருங்கடலில் ஆழ்கடல் பவளப்பாறையின் புதிய இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஸ்டார் வார்ஸ் கதாபாத்திரமான செவ்பாக்காவின் நினைவாக இந்தப் பவளப் பாறைக்கு இரிடோகோர்ஜியா செவ்பாக்கா என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது முதன்முதலில் 2006 ஆம் ஆண்டில் தென்பட்டது.
- இந்தப் பவளப்பாறையானது செவ்பாக்காவின் உயரமான உருவத்தைப் போன்ற வடிவத்தில் கடல் தளத்தில் நேராக நிமிர்ந்து தனித்து வளர்கிறது.

## மாநிலச் செய்திகள்

### குஜராத்தின் சூரிய சக்தி கிராமம்

- ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பால் 'சிறந்த சுற்றுலா கிராமம்' என்று உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தோர்டோ கிராமம், தற்போது முழுமையாக

சூரிய சக்தியில் இயங்குகிறது.

- இது குஜராத்தில் உள்ள மற்ற மூன்று சூரிய சக்தி கிராமங்களான மோதேரா, சுகி மற்றும் மசாலி ஆகியவற்றின் பாட்டியலில் இணைகிறது.
- பிரதமர் சூர்யா கர் முஃப்த் பிஜ்லி யோஜனாவின் கீழ், 81 வீடுகளின் மேற்கூரையில் 177 கிலோவாட் திறன் கொண்ட சூரிய சக்தி மின் தகடுகள் நிறுவப்பட்டு, ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள மின்சார இணைப்பை சூரிய சக்தியில் இயங்கச் செய்கிறது.
- சூரிய சக்தி அமைப்பு ஆனது ஆண்டுதோறும் 2.95 லட்சம் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு இதனால் ஒவ்வொரு வீட்டிற்கும் ஆண்டிற்கு 16,064 ரூபாய் செலவு மிச்சமாகும்.
- இந்தக் கிராமம் ஆண்டுதோறும் 13 லட்சத்திற்கு மேல் வருவாய் ஈட்டும் என்று எதிர் பார்க்கப் படுவதுடன், மின்கட்டமைப்பிற்கு வழங்கப்படும் உபரி மின்சாரம் கூடுதல் வருமானத்தை வழங்கும்.




## முக்கிய தினங்கள்

### சர்வதேச சம ஊதிய தினம் 2025 - செப்டம்பர் 18



- இது சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ILO) சம ஊதிய உடன்படிக்கையில் (C100) சேர்க்கப்பட்ட சம வேலைக்குச் சம ஊதியம் என்ற கொள்கையை ஊக்குவிக்கிறது.
- ஐக்கிய நாடுகள் சபை, ILO மற்றும் UN பெண்கள் ஆகியோரின் முன்னெடுப்புகள் மூலம் இந்த நாள் நிறுவப்பட்டது.
- சம ஊதிய சர்வதேச கூட்டணி (EPIC) ஆனது ILO, UN பெண்கள் மற்றும் OECD ஆகிய அமைப்புகளால் வழி நடத்தப் படுகிறது.

## சர்வதேச சிவப்பு பாண்டா கரடி தினம் 2025 - செப்டம்பர் 20




- இது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் 3வது சனிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- அருகி வரும் சிவப்பு பாண்டா கரடிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் உலகளாவிய பாதுகாப்பு முன்னெடுப்புகளை ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிவப்பு பாண்டா கரடிகள் நேபாளத்தின் உயரமான காடுகள், இந்தியா, பூடான், மியான்மர் மற்றும் சீனாவில் வாழ்கின்றன.
- பிரம்மபுத்திராவின் பெரிய வளைவுப் பகுதி அவற்றின் மக்கள்தொகையை இமயமலை சிவப்பு பாண்டா கரடிகள் மற்றும் சீனச் சிவப்பு பாண்டா கரடிகள் எனப் பிரிக்கிறது.
- சிவப்பு பாண்டா கரடிகள் 1990 ஆம் ஆண்டுகளில் சிக்கிமின் மாநில விலங்காக அறிவிக்கப் பட்டது என்பதோடு மேலும் டார்ஜிலிங் தேயிலை விழாவின் உருவச் சின்னமாகவும் அறிவிக்கப்பட்டது.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அருகி வரும் விலங்காக பட்டியலிடப் பட்டு உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★